**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாள் வெள்ளிக் கிழமை**
**அசல் வழக்கு எண் – 08/2020**
**CNR No:TNAL050000092020**

ஆண்டாள் – வாதி

/எதிர்/

ராமலிங்கம் – பிரதிவாதி

ஆகவே வழக்கு A Schedule சொத்தின் ஒவ்வொரு முனையிலிருந்தும், வழக்கு B Schedule சொத்தின் ஒவ்வொரு முனையையும் அடையவும், B Schedule சொத்தின் ஒவ்வொரு முனையிலிருந்தும், A Schedule சொத்தின் ஒவ்வொரு முனையையும் அடைய வாதிக்கு இயற்கை உரிமை உள்ளதென விளம்புகை செய்ய வேண்டுமாயும், வழக்கு B Schedule சொத்தில் எதிர்வாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பை நீதிமன்றம் கொடுக்கும் காலக்கெடுவிற்குள் அகற்ற செயல்முறை உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டுமாயும், எதிர்வாதி நீதிமன்றம் கொடுக்கும் காலக்கெடுவிற்குள் வழக்கு B Schedule சொத்தில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பை அகற்றத் தவறினால் வாதியே மேற்படி ஆக்கிரமிப்பை வகை செய்ய வேண்டுமாயும், இவ்வழக்கின் செலவு வாதிக்கு எதிர்வாதிகளால் கிடைத்திட வேண்டுமாயும், இன்னும் இவ்வழக்கின் தன்மைக்கேற்ப இதர நியாய பரிகாரங்கள் தந்து தீர்ப்புரையும், தீரப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமாயும் வாதி வேண்டுகிறார்.

இவ்வழக்கானது 22.03.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.விஸ்வேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பழனிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

இடைநிலை மனு எண் 03/2021 தள்ளுபடி செய்யப்பட்டது. வாரிசுகள் சேர்க்கப்பட வேண்டிய மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

–இல்லை–

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

–இல்லை–

ஒப்பம்/–திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.08/2020
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 22.03.2024.

------------------------------